[7th November 1966

செய்தித்தாள் எரிப்பு

*496. கேள்வி.—திரு. ம. கமலநாதன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 31—3—1966 அன்று நடந்த திருச்சி நகரசபைக் கூட்டத்தில் ஒரு தினசரிப் பத்திரிகை கொளுத்தப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) திருச்சி நகராட்சி நடவடிக்கை பற்றி ஒரு தினசரிப் பத்திரிகை தவறான செய்தி வெளியிட்டதாகவும், 31—3—1966-ல் நடந்த நகராட்சி மன்றக் கூட்டத்தில், இத்தகைய தவறான செய்திகள் வெளியிட்டது பற்றி நகராட்சி மன்ற உறுப்பினர்கள் கடுமையாக மறுப்பு தெரிவித்ததாகவும், நகராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் அப்பத்திரிகையின் இதழ் ஒன்றை எரித்துவிட்டதாகவும் திருச்சிராப்பள்ளி நகராட்சிக் கமிஷனர் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அந்தப் பத்திரிகையின் பெயர் என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 'தினத்தந்தி'.

திரு மீ. கலியாணசுந்தரம்: நகராட்சி மன்றக் கூட்டத்தில் ஒழுங்கீனங்கள் நடப்பதற்கு அனுமதிக்கலாமா ?

கனம் சபாநாயகர்: அரசாங்கம் இதன் மீது ஏதாவது நடவடிக்கை (ஆக்ஷன்) எடுத்ததா என்று வேண்டுமென்றால் கேளுங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: என்னிடம் வந்திருக்கிற தகவலின்படி நான் விவரம் தெரிவித்தேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திருச்சி நகராட்சிமன்ற கமிஷனர் அனுப்பிய ரிப்போர்ட்டின் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ரிப்போர்ட் வந்ததற்காக கௌன்சிலில் ஒரு தீர்மானம் போட்டு பத்திரிகைக்கு நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். பின்னால் ரிஜைண்டரும் அனுப்பியிருக்கிறார்கள். பத்திரிகையைக் கொளுத்திய விஷயம் தனிப்பட்ட மெம்பர் சம்பந்தப்பட்டது. இவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், அது லீகல் காம்ப்ளிக்கேஷன் உள்ளதா என்று கவனித்து அரசாங்கம் ஆலோசித்துத்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நகராட்சி மன்றக் கூட்டம் நடைபெறுகின்ற சமயத்தில், ஒரு பத்திரிகையை கொளுத்துவது என்றால், பத்திரிகையை எடுத்து வத்திப்பெட்டியை உபயோகித்துத்தான் கொளுத்தியிருக்கவேண்டும். இப்படி செய்வது வரை

யிலும் அங்குள்ள அதிகாரிகள் வேடிக்கையாக பார்த்துக்கொண்டு, அதற்கு ஆதரவாக இருந்தார்களா? இப்படி நடப்பதை தடுப்பதற்கு முயற்சி செய்தார்களா? தடுக்கவில்லை என்றால் அந்த அதிகாரிகள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது டெலிபிரேட்டாக 'ஃப்ரன்ட் சைடில்' நடைபெறவில்லை. 'பேக் சைடில்' ஒரு சில நிமிடங்களில் நடந்திருப்பதாக தகவல். ஆகவே, இதை முன்கூட்டியே தடுத்திருக்கவேண்டும் என்பதற்கு வழியில்லை.

திரு. எம். எஸ். மணி: இவ்வித ஒழுங்கீனம் நடந்த திருச்சி நகராட்சி மன்றத்தை கலைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது தனிப்பட்ட அங்கத்தினர் ஒருவரின் தவறு. இது நகராட்சி மன்றத்தின் தவறு என்று கனம் அங்கத்தினர் அவர்கள் நினைக்கிறார்களா? (சிரிப்பு)

கனம் சபாநாயகர்: நீங்களும் அவரைக் கேட்டால் எப்படி? கௌன்ஸிலுக்கு இதில் பொறுப்பில்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர் ஒருவருடைய தவறுக்கு கௌன்ஸில் பொறுப்பாகாது என்பது என்னுடைய எண்ணம்.

Mofussil bus stand in City

* 497 Q.—Sri A. RAGHAVA REDDI: Will the Hon. the Minister for Local Administration be please to state—

(a) whether there is a proposal to shift the Mofussil Bus Stand from Basin Bridge to Mint from where it was shifted when the work of constructing a bridge was taken up: and

(b) if so, when it will be implemented?

கனம் திரு. சே. ம. மஜீத்: (அ) & (இ) இவ்விஷயம் ஆலோசனையிலிருந்து வருகிறது.

நகரசபை உப தேர்தல்கள்

* 498 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேச அவசர நிலையையொட்டி தற்போதைக்கு நகரசபை உப தேர்தல்களை ஒத்திவைக்கும்படி தமிழ்நாடு அரசு உத்திரவு போட்டதா?